بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹு ல்லாஹு த் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 07/06/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

- பிஃரு மவூனா போருடைய நிலைகள், சம்பவங்கள் பற்றிய குறிப்பு
- உலகின் தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு துஆ செய்யுமாறு அஹ்மதிகளுக்கு கவனமூட்டல்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

**இந்தப் போரின் பின்னணியைக் குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்கள்:**

சுலைம் மற்றும் ஃகத்ஃபான் ஆகிய கோத்திரங்கள் அரேபியாவின் மத்திய பகுதியில் இருந்த உயர்வான இடமான நஜதில் குடியிருந்தார்கள். மேலும், மக்கத்து குரைஷிகளுடன் சேர்ந்து கொண்டு முஸ்லிம்களுக்கெதிராக சூழ்ச்சி செய்யக்கூடியவர்களாக இருந்தார்கள். பனூ ஆமிர் கோத்திரத்தின் தலைவரான அபூ பராஃ ஆமிரி என்பவர் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் அன்னாரை சந்திப்பதற்காக ஆஜரானார். பெருமானார் (ஸல்) அவர்கள் பெரும் மென்மையுடனும், பரிவுடன் அவருக்கு இஸ்லாத்தைப் பற்றி தப்லீக் செய்தார்கள். அவரும் வெளிப்படையான முறையில் ஆர்வத்துடனும் கவனத்துடனும் அன்னாருடைய சொற்பொழிவைக் கேட்டார். ஆனால் முஸ்லிமாகவில்லை. ஆயினும் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில், நஜத் வாசிகளுக்கு இஸ்லாத்தைப் பற்றி தப்லீக் செய்யும் வகையில் தாங்கள் என்னுடன் தங்களுடைய சில தோழர்களை அனுப்பி வையுங்கள். நஜத் மக்கள் தங்களுடைய அழைப்பை மறுக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன் என்று கோரிக்கை வைத்தார். தமக்கு நஜத் வாசிகள் மீது நம்பிக்கை இல்லை என்று அன்னார் கூறினார்கள். பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிப்பதாக அபூ பராஃ கூறினார். அவர் ஒரு கோத்திரத்தின் தலைவராக இருந்தார். அத்துடன் செல்வாக்குள்ளவராகவும் இருந்தார். ஆகவே அன்னார் அதை நம்பி சஹாபிகளின் ஒரு குழுவை நஜதை நோக்கி அனுப்பி வைத்தார்கள்.

**புகாரியில் கூறப்பட்டுள்ளதென்னவென்றால்,** பிரபல்யமான கோத்திரமான பனூ சுலைமுடைய கிளைக் கோத்திரங்களாக இருந்த ரிஃல் மற்றும் ஸக்வான் ஆகிய கோத்திரத்தைச் சார்ந்த சில மக்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார்கள். அவர்கள் இஸ்லாத்தை (ஏற்றுக்கொண்டதாக) வெளிப்படுத்திய பின்னர், தங்களுடைய சமுதாயத்தில் எவர்கள் இஸ்லாத்தின் எதிரிகளாக இருக்கிறார்களோ அவர்களுக்கெதிராக தங்களின் உதவிக்காக சில மக்களை அனுப்பி

வையுங்கள் என்று கோரிக்கை வைத்தார்கள். ஆகவே, பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த குழுவை அனுப்பி வைத்தார்கள். அபூ பராஃவும் அவர்களுடன் வந்திருக்கலாம்.

எவ்வாறிருப்பினும், பெருமானார் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரீ 4 ஆம் ஆண்டு ஸஃபர் மாதத்தில் ஹஸ்ரத் முன்ஸிர் பின் அம்ர் (ரலி) அவர்களின் தலைமையில் 70 சஹாபிகளைக் கொண்ட ஒரு குழுவை அனுப்பி வைத்தார்கள். அவர்களில் ஏறக்குறைய அனைவரும் திருக்குர்ஆனை ஓதக்கூடிய 'காரி' ஆக இருந்தார்கள்.

தப்லீக் கடமையை முழுமை செய்வதற்காகவும் இஸ்லாத்தை பரப்புகின்ற தூய பணியை முன்னெடுத்து செல்வதற்காகவும் இவ்வளவு பெரிய நடவடிக்கையை அன்னார் மேற்கொண்டார்கள்.

இந்த போர் தொடர்பாக பெருமானார் (ஸல்) அவர்களின் ஒரு கடிதத்தைப் பற்றிய குறிப்பும் காணக் கிடைக்கிறது. அதை ஆமிர் பின் துஃபைல் என்பவன் பெயருக்கு அன்னார் எழுதியிருந்தார்கள். ஹஸ்ரத் ஹராம் பின் மில்ஹான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் கஅப் பின் ஸைத் (ரலி) மற்றும் ஹஸ்ரத் முன்ஸிர் பின் முஹம்மத் (ரலி) என்ற தம் இரு தோழர்களை அழைத்துக் கொண்டு ஆமிர் பின் துஃபைல் -யிடம் சென்றார்கள். அம்மக்கள் ஆரம்பத்தில் நயவஞ்சகமான முறையில் வரவேற்பு கொடுத்தார்கள். ஆனால், ஹஸ்ரத் ஹராம் பின் மில்ஹான் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் தப்லீகை ஆரம்பித்தபோது அங்கிருந்தவர்கள் தம் தீய அகத்தை வெளிப்படுத்தினர். அந்த அப்பாவி தூதுவரை பின்னால் இருந்து ஈட்டியால் தாக்கி அங்கேயே கொன்று போட்டார்கள். அந்நேரத்தில் ஹஸ்ரத் ஹராம் பின் மில்ஹான் (ரலி) அவர்களுடைய நாவிலிருந்து

اَللّٰهُ اَكْبَرُ فُزْتُ وَرَبِّ الْكَعْبَةِ

என்ற சொற்கள் வெளிப்பட்டன. அதாவது, 'அல்லாஹ் மிகப் பெரியவன்! கஅபாவின் இறைவன் மீது ஆணையாக! நான் என் குறிக்கோளை அடைந்து விட்டேன்.'

ஆமிர் பின் துஃபைல் பெருமானார் (ஸல்) அவர்களின் தூதுவரை கொன்று விட்டதோடு நின்று விடாமல் அதற்குப் பிறகு பனூ ஆமீர் கோத்திரத்து மக்களிடம், எஞ்சியுள்ள முஸ்லிம் கூட்டத்தின் மீது தாக்குதல் நடத்துமாறு அவர்களை தூண்டி விட்டான். ஆனால் அவர்களோ மறுத்து விட்டார்கள். ஆகவே அவன், சுலைம் கோத்திரத்தில் இருந்து பனூ ரிஃல், ஸக்வான் மற்றும் உஸய்யா போன்ற மக்களை தன்னோடு இணைத்துக் கொண்டு முஸ்லிம்களின் இந்த ஆதரவற்ற சிறு கூட்டத்தின் மீது தாக்குதல் நடத்தினான். முஸ்லிம்கள் அவர்களிடம், உங்களுடன் எங்களுக்கு எவ்வித சண்டையும் கிடையாது! நாங்களோ பெருமானார் (ஸல்) அவர்களின் சார்பாக உங்களுடன் சண்டையிட வரவில்லை. மாறாக, ஒரு வேலைக்காக வந்திருக்கின்றோம் என்று கூறிப்பார்த்தார்கள். ஆனால் அவர்களோ எதையும் கேட்கவில்லை. அனைவரையும் வாளால் வெட்டி வீழ்த்தி விட்டார்கள்.

**இந்தப் போரில் ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) அவர்களின் ஷஹாதத் குறிப்பு இவ்வாறு காணப்படுகிறது.** இவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமையாக இருந்தார்கள். அத்துடன், பெருமானார் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆகியோருடன் ஹிஜ்ரத் செய்து மதீனாவுக்கு செல்லக்கூடிய நற்பேறையும் இவர்கள் பெற்றிருந்தார்கள். பிஃரு மவூனா சம்பவத்தின் போது இவர்களும் ஷஹீதானார்கள். ஆமிர் பின் ஃபுஹைரா அவர்கள் கொல்லப்பட்ட

போது அவர்கள் வானத்தின் பக்கம் உயர்த்தப்பட்டதை நான் கண்டேன். வானம் அவருக்கும் பூமிக்கும் இடையில் இருந்தது. பிறகு அவர் பூமியில் இறக்கப்பட்டார் என்று ஆமிர் பின் துஃபைல் கூறினான். இவன் அப்பொழுது முஸ்லிம் ஆகி இருக்கவில்லை. அப்பொழுது இந்த காட்சியை அவன் கண்டான்.

பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இந்தச் செய்தி வந்தடைந்த போது, அவர்கள் கொல்லப்பட்ட செய்தியை சஹாபிகளுக்கு கூறினார்கள். உங்களுடைய தோழர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள். அவர்கள் தம் இறைவனிடம், எங்கள் இறைவா! எங்களைக் குறித்த விஷயத்தை எங்களது சகோதரர்களிடம் கூறி விடுவாயாக! நாங்கள் உன் மீது திருப்தி கொண்டுள்ளோம்; நீ எங்கள் மீது திருப்தி கொண்டு விட்டாய் என்று துஆ செய்தார்கள். ஆகவே அவர்களை குறித்து அல்லாஹ் செய்தியை தெரிவித்து விட்டான் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபுஹைறா (ரலி) அவர்களை ஷஹீதாக்கிய ஜப்பார் பின் சல்மா என்பவர் பிற்காலத்தில் முஸ்லிமாகி விட்டார். அவர் கூறுகிறார்: ‘என்னை இஸ்லாத்தின் பக்கம் ஈர்த்த விஷயம் என்னவென்றால், நான் ஆமிர் பின் ஃபுஹைறா (ரலி) அவர்களை ஷஹீத் ஆக்கியபோது அவர்களின் நாவிலிருந்து இயல்பாக,

فُزْتُ وَرَبِّ الْكَعْبَةِ

என்ற சொற்கள் வெளிப்பட்டன. அதாவது, ‘கஅபாவின் இறைவனின் மீது ஆணையாக! நான் வெற்றி பெற்று விட்டேன்.’ இச்சொற்கள் எனது உள்ளத்தில் இறங்கி விட்டன. இந்த சொற்களின் பொருள் என்ன? என்று நான் சிந்திக்க ஆரம்பித்து விட்டேன். நான் மக்களிடம் இதற்கான காரணத்தைக் கேட்டபோது, முஸ்லிம்கள் இறைவழியில் உயிர் கொடுப்பதை மிகப்பெரும் வெற்றியாகக் கருதுகிறார்கள் என்று எனக்கு தெரிய வந்தது. இந்த விஷயம் என் மீது எந்த அளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால் நான் முஸ்லிமாகி விட்டேன்.’

இந்தப் போரில் கலந்து கொண்ட அனைத்து சஹாபா பெருமக்களின் பெயர்களும் வரலாற்று நூல்கள், வாழ்க்கை வரலாற்று நூல்கள் ஆகியவற்றில் இடம்பெறவில்லைதான்! ஆயினும், ஷஹீதானவர்களில் 29 சஹாபா பெருமக்களுடைய பெயர்கள் இடம் பெற்றுள்ளன. எவ்வாறிருப்பினும், உயிர் தப்பிய சஹாபிகளைக் குறித்து இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

இந்தப் போரில் கலந்து கொண்ட சஹாபிகளில் இருவர், அதாவது ஹஸ்ரத் அம்ர் பின் உமய்யா ஸம்ரீ (ரலி) மற்றும் ஹஸ்ரத் முன்ஸிர் பின் முஹம்மது (ரலி) ஆகியோர் (உயிர் தப்பினார்கள்). முன்ஸிர் அவர்கள் சண்டையிட்டவாறு ஷஹீதாகி விட்டார்கள். ஆமிர் பின் துஃபைல் -ன் தாயார் ஓர் அடிமையை விடுதலை செய்வதாக நேர்ந்திருந்தாள். ஆகவே அவன் தன் தாயாருடைய நேர்த்திக் கடனின் காரணமாக ஸம்ரீ கோத்திரத்தைச் சார்ந்த ஹஸ்ரத் அம்ர் பின் உமய்யா (ரலி) அவர்களை அரேபிய வழக்கத்திற்கேற்ப நெற்றி முடியை வெட்டி விடுதலை செய்து விட்டான். அங்கிருந்து விடுதலையான பிறகு ஹஸ்ரத் அம்ர் பின் உமய்யா (ரலி) அவர்கள் ஓரிடத்தில் பனூ ஆமிர் அல்லது பனூ ஸுலைம் உடைய இரு நபர்களை கொன்று விட்டார்கள். ஆனால், அவ்விரு கோத்திரங்களுக்கும் ஓர் உடன்படிக்கையின் அடிப்படையில் பெருமானார் (ஸல்) அவர்கள் அடைக்கலம் வழங்கியிருந்தார்கள். இதைக் குறித்து ஹஸ்ரத் அம்ர் பின் உமய்யா (ரலி) அவர்களுக்கு தெரியவில்லை. ஆகவே, பெருமானார் (ஸல்) அவர்கள் அவ்விருவருக்கான இழப்பீட்டுத் தொகையை வழங்கினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களுக்கும் அன்னாருடைய சஹாபிகளுக்கும் ரஜீஃ சம்பவம் குறித்தும், பிஃரு மவூனா சம்பவம் குறித்தும் ஏறக்குறைய ஒரே நேரத்தில்தான் தகவல் கிடைத்தது. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இதற்கான கடும் வருத்தம் ஏற்பட்டது. எந்த அளவுக்கு என்றால், இதுபோன்ற துயரம் அதற்கு முன்பும் ஒருபோதும் ஏற்படவில்லை; அதற்கு பிறகும் ஒருபோதும் ஏற்படவில்லை. ஏறக்குறைய 80 சஹாபிகள் இவ்வாறு ஏமாற்றப்பட்டு திடீரென்று கொல்லப்படுவது - அதுவும் அந்த சஹாபிகளில் அதிகமானோர் திருக்குர்ஆனை மனனம் செய்தவர்களாக இருந்தார்கள் - பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இந்த செய்தி 80 மகன்களுடைய மரணச் செய்திக்கு ஒப்பானதாக இருந்தது. ஆனால் இஸ்லாத்தில் எந்நிலையிலும் பொறுமைக்கான கட்டளை உள்ளது. ஆகவே அன்னார் இந்த செய்தியை கேட்டுவிட்டு, இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன் என்று கூறினார்கள். இது அபூ பராஃவுடைய செயலின் விளைவாகும். இல்லை என்றால், நான் அந்த மக்களை அனுப்புவதற்கு விருப்பம் இல்லாமல்தான் இருந்தேன் என்று மட்டும் கூறிவிட்டு அன்னார் மௌனமாகி விட்டார்கள்.

ரஜீஃ சம்பவம் மற்றும் பிஃரு மவூனா சம்பவங்களுக்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு மாத காலம் வரை தினந்தோறும் காலைத் தொழுகையில் நிற்கும் போது மிகவும் உருக்கத்துடன் ரிஃல், ஸக்வான், உஸய்யா மற்றும் பனூ லிஹ்யான் ஆகிய கோத்திரங்களின் பெயர்களை எடுத்துக் கூறி அல்லாஹ்விடத்தில், என்னுடைய எஜமானனே! நீ எங்களின் நிலை மீது கருணை காட்டுவாயாக. இஸ்லாத்தின் எதிரியுடைய கையை தடுப்பாயாக. அவர்கள் உன் மார்க்கத்தை அழிப்பதற்காக இரக்கமற்ற முறையிலும், கடுமையான முறையிலும் அப்பாவி முஸ்லிம்களின் இரத்தத்தை சிந்தச் செய்கிறார்கள் என்று துஆ செய்வார்கள்.

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:* நான் எப்பொழுதும் வலியுறுத்துவது போன்று, அநீதிக்குள்ளாக்கப்பட்ட பாலஸ்தீன மக்களுக்காக துஆக்களை செய்து வாருங்கள். அநீதியார்களை பிடிப்பதற்கான ஏற்பாட்டை அல்லாஹ் விரைவில் செய்வானாக! எவ்வாறு சஹாபிகள் ஏமாற்றப்பட்டு கொல்லப்பட்டார்களோ அவ்வாறே அப்பாவிகள் கொல்லப்படுகிறார்கள். சில சமயம் ஓரிடத்திற்கு அனுப்பப்படுகிறார்கள்; சில சமயம் வேறு இடத்திற்கு அனுப்பப்படுகிறார்கள். பிறகு அங்கு குண்டுகள் வீசப்படுகின்றன. அல்லாஹ் கருணை காட்டுவானாக!

உலகின் பொதுவான நிலைகளுக்காகவும் துஆ செய்யுங்கள். உலகம் மிக விரைவாக அழிவை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. போருக்கான அறிகுறிகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. போரின் தீய தாக்கத்திலிருந்தும், அதனுடைய தீங்கிலிருந்தும் அல்லாஹ் அஹ்மதிகளை பாதுகாப்பானாக!

பாகிஸ்தானிய அஹ்மதிகளுக்காகவும் குறிப்பாக துஆ செய்து வாருங்கள்! தற்போது மீண்டும் அவர்களுக்கு கஷ்டங்கள் அதிகரித்து வருகின்றன. அல்லாஹ் கருணை காட்டுவானாக! அநீதியாளர்களிடமிருந்து அவர்களுக்கும் இரட்சிப்பை வழங்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ
وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْىِ يَعِظُكُمْ
لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)